# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 13.05.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10934/F/2024**

| | | |
|---|---|---|
| திரு.M.இராதாகிருஷ்ணன் | .. | மேல்முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| பொதுதகவல் அலுவலர்/<br>துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),<br>துணைப்பதிவாளர் வீட்டுவசதி அலுவலகம்,<br>திருச்சிராப்பள்ளி-620020. | .. | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 13.05.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.M.இராதாகிருஷ்ணன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.G.செல்வன் சத்ரபதி, கூட்டுறவு சார்பதிவாளர், மண்டலத் துணைப்பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம், திருச்சிராப்பள்ளி மண்டலம், 16/1 சமது பள்ளித்தெரு, காஜாநகர், திருச்சிராப்பள்ளி அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 15/05/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் மதுரை வன அலுவலர் பொதுசேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் ந.க.எண்.143/2022/கி.வி., நாள் 17.05.2022ன் படி மேற்கொள்ளப்பட்ட சட்டப்பிரிவு 81-இன் அறிக்கை நகல் மற்றும் பொருளாதார குற்றபிரிவிற்கு பரிந்துரைக்கப்பட்ட கடித நகல் என்பன போன்ற 9 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 10.06.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 14.06.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 20.07.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 19(3)ன் கீழ் 22.08.2024 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (13.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 10.06.2024 மற்றும் மேல்முறையீட்டு அலுவலர் 20.07.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் மதுரை வன அலுவலர் பொதுசேவை கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் சட்டப்பிரிவு 81-ன் கீழ் விசாரணை மேற்கொண்டு அவ்விசாரணை பதிவாளர் (வீட்டுவசதி) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை.ந.க.எண்.7718/2023/சப2(2), நாள் 20.12.2023 இன் மூலம் ரத்து செய்யப்பட்டு மறு விசாரணைக்கு பதிவாளர் (வீட்டுவசதி) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.7718/2023சப2(2), நாள் 20.12.2023ன் மூலம் ஆணையிடப்பட்டு நடைபெற்று வந்த 81 விசாரணையை எதிர்த்து முன்னாள் சங்க செயலாளரால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதிப்பேராணை வழக்கு எண்.WP(MD) No.6402-2024-இல் 19.03.2024 அன்று இடைக்கால தடையாணை பெறப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவித்து, அதன் விவரத்தை தகவலாக வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இன்றைய விசாரணையில் மனுதாரர் நீதிப்பேராணை வழக்கு எண்.WP(MD) No.6402-2024-இல் 19.03.2024 அன்று இடைக்கால தடையாணை நகலை பெற்றுத்தருமாறு கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் ஏற்புடையது அல்ல என இவ்வாணையம் கருதி கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **“மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனங்களுக்கு தற்போது நீதிமன்ற தடையாணை நகலை தகவல்களாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த**

**ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 18.06.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது".**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10934/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர்/
துணைப்பதிவாளர் (வீட்டுவசதி),
துணைப்பதிவாளர் வீட்டுவசதி அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி-620020.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.ராதாகிருஷ்ணன்,
எண் 7, சத்யா பிளாஸா 2வது தளம்,
டாக்டர் திருமூர்த்தி நகர்,
பிரதான சாலை நுங்கம்பாக்கம்,
சென்னை-600 034.

Copy to file: KR/PA